சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண்.3282/அ1/2023, நாள்: 27.04.2023

பொருள் தமிழ்நாடு பள்ளிக்கல்வி சார்நிலைப்பணி - அரசு நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 2022-2023 ஆம் கல்வியாண்டில் மாற்றுப் பணி ஆணை வழங்கியது-பணியிலிருந்து விடுவித்தல் - சார்பு.

பார்வை 1.சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் விண்ணப்பங்கள்.

2.தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்.ந.க.எண்.0701/சி3/இ1/2022. நாள்:26.04.2023.

—

பள்ளிக்கல்வித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அரசு நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஒரு சில பட்டதாரி ஆசிரியர்களுக்கு கடந்த ஆண்டில் (2022-2023) பல்வேறு காரணங்களின் அடிப்படையில் மாற்றுப்பணி மூலம் பணிபுரிய ஆணை வழங்கக் கோரி பார்வை 1ல் காணும் கடிதம் மூலம் விண்ணப்பிக்கப்பட்டதையடுத்து இக்கல்வியாண்டு முடிய (2022-2023) மாற்றுப்பணி மூலம் பணிபுரிய ஆணை வழங்கப்பட்டது.

தற்போது இக்கல்வியாண்டிற்கான (2022-2023) பள்ளி இறுதி வேலை நாள் 28.04.2023 அன்றோடு முடிவு பெறவுள்ளதால் கடந்த ஆண்டில் இக்கல்வியாண்டு வரை மாற்றுப்பணி மூலம் பணிபுரிய ஆணை வழங்கப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்களை உடன் பணியிலிருந்து விடுவித்து பள்ளி இறுதி வேலை நாளில் அவரவர்களின் பள்ளியில் சேர அறிவுறுத்திட பார்வை 2ல் காணும் கடிதத்தின்படி அறிவுறுத்தப்பட்டதையடுத்து, சார்ந்த பட்டதாரி ஆசிரியர்களை உடன் பணியிலிருந்து விடுவித்திட சார்ந்த பள்ளித்தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

//ஒப்பம்//
முதன்மைக்கல்வி அலுவலர்
சென்னை-08.

பெறுநர்

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்,சென்னை மாவட்டம்

நகல்

அரசு உயர்நிலைப்பள்ளி/மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள், சென்னை மாவட்டம்